# முரசொலி செல்வம் கலைஞரோடு கலந்தார்!



இடி இடித்து
மின்னலடித்து
மழையடித்தப் போதும்
முரசொலி
ஏந்தியவன் நீ !

அரசியலில்
நெருப்புச் சூறாவளி
வீசிய போதும்
கலைஞரோடு
நீந்தியவன்நீ !

மிசா
நெருக்கடியும்
முரசொலிக்கு
நெருக்கடியும் வந்த போதும்
கலைஞரின்
கடிதத்தை
உடன்பிறப்புகளிடம்
சேர்த்தவன்நீ !

ஜெயலலிதா அரசு
சட்டமன்ற
கூண்டில்
நிறுத்திய போது
முரசொலியின்
கம்பீரம் நீ !

அலையோடு
விளையாடுவதை விட
ஆழிப்பேரலையை
கடக்கக்
கலைஞரிடம்
கற்றுக்
கொண்டவன்நீ !

தொண்டர் முதல்
முதலமைச்சர் வரை
தலைவர் கலைஞரையும்..
தலைவர்
முத்துவேல்கருணாநிதிஸ்டாலின்
அவர்களையும்
கண்டவன்நீ !

ஊராட்சி முதல்
தில்லி வரை
அரசியலின்
நாடிப் பிடித்தவன்
நாடி பிடித்தவன்
நீ !

தலைவர் கலைஞருக்கு
முரசொலி மாறன்
மனசாட்சி
முரசொலி செல்வம்
உயிர் காட்சி என்று
சொல்லவா !

தலைவர்
முதலமைச்சருக்கு
அனைத்திலும்
வழிகாட்டி
அல்லவா !

எதிரிகளுக்கு
உன்
எழுத்தில்
வைக்கும்
பொடியும்
வெடியும் உச்சம் !

முரசொலி
அழுது
புலம்புகிறது
உன் பிரிவில்
அத்தனை
துக்கம் !

கலைஞர்
மடியில் வளர்ந்து
நெஞ்சில் வாழ்ந்து
நிலைக்கிறாய் !

தலைவர் கலைஞரோடு
புகழில்
நிறைகிறாய் !

**ஈரோடு இறைவன்**
இணைச் செயலாளர்
திமுக இலக்கிய அணி



# திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

## கோ.சு. மணி
## அக்டோபர் 12 (1962)



**சென்னை 57வது வட்டக் கழகச் செயலாளராகப் பணியாற்றியவர்.**

**சென்னை மாநகராட்சி மன்ற உறுப்பினராக பணியாற்றியவர்**

**மும்முனைப் போராட்டத்தில் கலந்து கொண்டு சிறை சென்றார்.**

**விலைவாசி போராட்டத்தில் பங்கேற்று சிறையில் இருந்தபோது சிறைக் கைதிகளால் தாக்கப்பட்டு மரணமடைந்தார்.**

**தலைவர் கலைஞர் அவர்களால் 'கொள்கை குன்று' எனப் பாராட்டப்பட்டவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

# முரசொலி செல்வம் மறைவு: தென்னிந்திய நடிகர் சங்கம் இரங்கல்!

சென்னை, அக்.12-

முரசொலி செல்வம் மறைவுக்கு தென்னிந்திய நடிகர் சங்கம் சார்பில் இரங்கல் தெரிவிக்கப்பட்டு உள்ளது.

இது குறித்து நடிகர் சங்கம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:-

தென்னிந்திய நடிகர் சங்கத்தில் இரங்கல் செய்தியில் "முரசொலி பத்திரிகையில், சுமார் 50 ஆண்டுகளாக நிர்வாக ஆசிரியராக பணியாற்றி தன் எழுத்துகளால் ஜனநாயகக் குரவாக ஒலித்தவர் முரசொலி செல்வம்.

அவர்கள் முரசொலி நாளிதழின் ஆசிரியர் மற்றும் வெளியீட்டாளராகவும் இருந்துக்கொண்டே திரைத்துறையில் இது எங்க நாடு, திருட்டு ராஜாக்கள், மாடி வீட்டு ஏழை, பாலைவன ராஜாக்கள், புயல்பாடும் பாட்டு, பாடாத தேனீக்கள், பாசப் பறவைகள் உட்பட 50க்கும் மேற்பட்ட திரைப் படங்களை தயாரித்தவர்.

மேலும் திரைத்துறை யி லும் பத்திரிக்கைத்துறையிலும் சிறப்பான பங்களித்தவர்.

84 வயதான முரசொலி செல்வம் அவர்கள், வயது மூப்பு காரணமாக உடல் நலக்குறைவால் காலமானார்.

அவருடைய மறைவால் இழந்து வாடும் குடும்பத்தாருக்கு தென்னிந்திய நடிகர் சங்கம் சார்பாக ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறோம்".

இவ்வாறு தென்னிந்திய நடிகர் சங்கம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

# திருச்சி வடக்கு மாவட்ட கலை, இலக்கிய, பகுத்தறிவுப் பேரவை ஆலோசனைக் கூட்டம்!

திருச்சி, அக். 12 -

திருச்சி மாவட்டம், துறையூரில் 02.10.2024 மாலை 5:30 மணி அளவில் ஏ வி எஸ் மண்டபத்தில் திருச்சி வடக்கு மாவட்ட கலை, இலக்கிய, பகுத்தறிவுப் பேரவையின் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

ஆலோசனைக் கூட்டத்திற்கு மத்திய மண்டல பொறுப்பாளர் மாநில துணைச் செயலாளர் எழில்மாறன் செல்வேந்திரன் தலைமை தாங்கினார்.

நிகழ்ச்சிக்கு திருச்சி மாவட்ட ஊராட்சி குழு தலைவர் தர்மன் ராஜேந்திரன் முன்னிலை வகித்தார்.

மேலும் நகர்மன்ற செயலாளர் மெடிக்கல் முரளி, மத்திய ஒன்றிய செயலாளர் இளா. அண்ணாதுரை, மேற்கு ஒன்றிய செயலாளர் வீரபத்திரன், கிழக்கு ஒன்றிய செயலாளர் சரவணன், துறையூர் ஒன்றிய குழு தலைவர் திருமதி. சரண்யா மோகன் தாஸ், பொதுக்குழு உறுப்பினர் கிட்டப்பா ,

வடக்கு மாவட்ட விவசாய அணி அமைப்பாளர் செல்லமுத்து, மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் திருமதி. கிருபா, மாவட்ட வர்த்தக அணி அமைப்பாளர் திருமூர்த்தி,

மாவட்ட சுற்றுச்சூழல் அணி அமைப்பாளர் அம்மன் பாபு, மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் சுரேஷ் குமார் ,

மாவட்ட ஆதிதிராவிடர் அணி தலைவர் மணி வண்ணன், மாணவரணி துணைத் தலைவர் பிரபாகரன் ,

பொறியாளர் அணி துணை அமைப்பாளர் கலை செல்வன், விளையாட்டு மேம்பாட்டு அணி துணை அமைப்பாளர் கௌதம், கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.

கலை, இலக்கிய, பகுத்தறிவுப் பேரவையின் வடக்கு மாவட்ட தலைவர் கஸ்டம்ஸ் மகாலிங்கம் , மாவட்ட அமைப்பாளர் கா. லெனின்,

மாவட்டத் துணைத் தலைவர் செல்வராஜ், மாவட்ட துணை அமைப்பாளர்கள் மு.தமிழரசன், செந்தில், இளங்கோவன், ராஜ்குமார் கலந்து கொண்டார்கள்.

இந்த ஆலோசனைக் கூட்டத்தில் கலைஞர் நூற்றாண்டு நிறைவு விழா சார்பாக அரசு பள்ளி மாணவ, மாணவியருக்கு கலைஞரின் கவிதைகள் வசனங்கள் ஒப்புவித்தல் போட்டி நடத்துவது சம்பந்தமாகவும்,

திருச்சி வடக்கு மாவட்ட கழகத்தின் கலை, இலக்கி, பகுத்தறிவுப் பேரவை நகர பேரூர் கழக, ஒன்றியக் கழக நிர்வாகிகளை நியமிப்பது சம்பந்தமாகவும்,

தமிழகத்தின் துணை முதல்வராக பொறுப்பேற்று இருக்கும் உதய நிதி ஸ்டாலின் அவர்களுக்கு வாழ்த்து தெரிவிக்கும் விதமாகவும் இந்த ஆலோசனைக் கூட்டத்தில் மத்திய மண்டல பொறுப்பாளர் எழில்மாறன் செல்வேந்திரன் உரையாற்றினார்கள்.

ஆலோசனைக் கூட்டத்தில் கலந்து கொண்ட அனைத்து நிர்வாகிகளையும் கலை, இலக்கிய, பகுத்தறிவுப் பேரவையின் மாவட்ட அமைப்பாளர் லெனின் வரவேற்றார். தமிழரசன் நன்றியுரை ஆற்றினார்.

# நட்பு நாயகன்!



நட்பு நாயகன்
நறுமலர்க்கோவையன்
முரசொலி செல்வம்
மறைந்தார் என்பதை
மனிதர் நம்பலாம்
அவர் மனத்தோடு பழகிய
மலர்கள் நம்பமாட்டா;

அவர் இல்லை என்று
குடும்பம் கருதலாம்
அவர் இதயத்தில்
குடியேறியிருந்த
அன்பு நம்பாது
அனைவர் மீதான
ஆசை நம்பாது;

அவர் வாழ்வு
முடிந்தது என்று பேச்சுகள்
எழலாம்
மென்மையை மேன்மையை
மீட்டிய பாச யாழ்
அப்படிச் சொல்லாது

கலைஞர்,மாறன்,செல்வம்
மூவரும்
முரசொலி ஏட்டின்
இதயத்துடிப்புகளில்
காலமெல்லாம் இருப்பர்
காலமாக மாட்டார்கள்.

கனிவும் பணிவும்
வற்றாது ஓடிக்கொண்டிருந்த
மானுடநதி செல்வம்

அவரோடு
வெகுளியும் வெறுப்பும்
ஒப்பந்தம் போட முடியாது.

இனிய மழைத்துளிகளை
ஏந்தி வந்தவர் செல்வம்
இடிகளின் மகனாக
எப்போதும்
நடந்துகொண்டதில்லை.

ஆழமான
கொள்கைப்பற்றுடையவர்
காற்றின் கலவர அலைகளால்
அவரை ஒருபோதும்
அசைக்கமுடியாது.

சிலந்தியாக
அவர்பின்னிய
வலைகளில் இருந்த
எழுத்தின் வலிமையை
முரசொலி படித்தவர் அறிவார்
மூவாத் தமிழும் அறியும்.

கவிப்பேரருவி
**ஈரோடு தமிழன்பன்**



# நாமக்கல் மேற்கு மாவட்டக் கழகச் செயற்குழுக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் எஸ்.எம்.மதுரா செந்தில் அறிவிப்பு!



நாமக்கல், அக். 12 -

நாமக்கல் மாவட்டத்திற்கு முதல்வர் அவர்கள் வருகையொட்டி, நாமக்கல் மேற்கு மாவட்டக் கழகச் செயற்குழுக் கூட்டம் நாளை (13.10.2024 ) நடைபெறுகிறது என மாவட்டச் செயலாளர் எஸ்.எம். மதுராசெந்தில் அறிவித்துள்ளார்.

அவரது அறிக்கை வருமாறு :-

நாமக்கல் மேற்கு மாவட்டக் கழக செயற்குழுக் கூட்டம் நாளை ( 13.10.2024 - ஞாயிற்றுக் கிழமை) காலை 10.00 மணிக்கு திருச்செங்கோடு, வேலூர் ரோடு, மாவட்டக் கழக அலுவலகத்தில் தளபதியார் அரங்கில் மாவட்ட அவைத் தலைவர் இரா.நடன சபாபதி தலைமையில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் மாநில, மாவட்ட நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர்க் கழகச் செயலாளர்கள், பொறுப்பாளர்கள், சார்பு அணி தலைவர்கள், அமைப்பாளர்கள், ஊராட்சி ஒன்றிய குழு தலைவர், துணைத் தலைவர், நகர்மன்ற தலைவர்கள், துணைத் தலைவர்கள், பேரூராட்சி தலைவர்கள், துணை தலைவர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**பொருள்:**

1) அக்டோபர் 16 ஆம் தேதி நாமக்கல், பொம்மை குட்டை மேட்டில் அரசு நலத் திட்ட உதவிகள் வழங்கவும், புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டவும், முடிவடைந்த திட்டங்களை திறந்து வைக்கவும் வருகை தரும் கழகத் தலைவர் - தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு வரவேற்பு அளிப்பது குறித்து.

2) ஒன்றிய, நகர, பேரூர் சார்பு அணி நிர்வாகிகள் பட்டியலை தலைமை கழகத்திற்கு சமர்ப்பித்தல் குறித்து

3) கழகத் தலைவர்-தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி பரமத்தி வேலூர், திருச்செங்கோடு, குமாரபாளையம் தொகுதிகளுக்கு புதிதாக நியமிக்கப்பட்டுள்ள தொகுதி மேற்பார்வையாளர்கள் அறிமுகம் மற்றும் கழக ஆக்கப் பணிகள் குறித்து.

இவ்வாறு மாவட்டச் செயலாளர் எஸ்.எம். மதுரா செந்தில் அறிவித்துள்ளார்.



மண்ணின் மைந்தர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் மூத்தப்பிள்ளையாம் முரசொலி நாளேட்டின் ஆசிரியராகவும், கழக கொள்கைகளை பாமரருக்கும் கொண்டுசேர்த்த பெருமைமிக்க முரசொலி செல்வம் அவர்கள் மறைவினை முன்னிட்டு திருவாரூர் நகர கழக அலுவலகத்தில் வைக்கப்பட்டிருந்த முரசொலி செல்வம் அவர்களின் திரு உருவப் படத்திற்கு மாவட்டக் கழகச் செயலாளர் பூண்டி கே.கலைவாணன் எம்.எல்.ஏ. மலர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். உடன் நகரச் செயலாளர் வாரை எஸ்.பிரகாஷ், பொதுக்குழு உறுப்பினர் டி.செந்தில் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.